## ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் - 2014

ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சுபிரி வாசனா லொத்தரிலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 2,760,530 தொகையான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உதவி பெறுபவர்களுக்கு செலுத்துவதற்காக நானாவித உதவியாக பணமாக அனுப்பப்பட்ட எனினும் அவர்களுக்குச் செலுத்தப்படாது மன்றத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 558,558 தொகை ஏனைய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த உதவிப் பணம் மீளச் செலுத்தப்பட வேண்டியதா என சரியாகக் கண்டறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களை விஞ்சிய காசோலைகளை அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 247,392 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் ரூபா 747,803 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 1,508,798 ஆகக் காணப்பட்மையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 760,995 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. சர்வதேச ஊனமுற்றோர் தின செலவினம் ரூபா 339,839 இனால் அதிகரித்தமை, நுழைவு வசதிகள் ( பொது மற்றும் தனியார் கட்டிடங்கள்) செலவினம் ரூபா 1,599,184 இனால் அதிகரித்தமை மற்றும் கல்வி உதவிகள் ரூபா 740,741 இனால் அதிகரித்தமை போன்றன நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தன.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டின் போது உதவி உபகரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 29,762,905 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் செலவினமான ரூபா 21,600,284 தொகையுடன் ஒப்பிடும் போது 37 சதவீத அதிகரிப்பொன்றாக அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உதவி உபகரண செலவினம் ரூபா 26,000,000 ஆனமையால் உள்ளபடியான செலவினத்திற்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான செலவினத்திற்குமிடையே ரூபா 3,762,905 தொகையான வேறுபாட்டைக் காண முடிந்தது. உதவி உபகரணங்களுக்காக செலவிடப்பட்ட தொகை மீளாய்வாண்டிற்கான மொத்த நிதி ஏற்பாடான ரூபா 46,800,000 தொகையில் 63 சதவீதமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

மீளாய்வாண்டில் மன்றத்தின் செயலாற்றலில் நிதி மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது வீடமைப்பு உதவிக்காக ரூபா 75 மில்லியன் செலவிடுவதவற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ரூபா 43.77 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டமையால் அதன் நிதி செயலாற்றல் 58 சதவீதமாக இருந்தது.

(ஆ) கோவைகளின் படி மீளாய்வாண்டின் போது 34 கட்டிடங்களுக்காக நுழைவு வசதிகளை வழங்கியிருக்கும் போது 2014 இன் செயல்முன்னேற்ற அறிக்கையில் 18 கட்டிடங்களுக்கு மாத்திரம் வசதிகள் வழங்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் படி பௌதீக செயல்முன்னேற்றம் 47 சதவீதமாகவும் நிதி செயல்முன்னேற்றம் 82 சதவீதமாகவும் இருந்தன.

(இ) விளையாட்டு உதவி மற்றும் ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வளித்தல் அமைப்புக்களுக்கான உதவிகள்

1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 117 தொண்டர் அமைப்புக்கள் ஊனமுற்றோர் மன்றத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் ஊனமுற்றோரின் நிலையினைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்க மற்றும் தொண்டர் அமைப்புக்கள் மற்றும் தனியார் சங்கங்களின் மூலம் தயாரிக்கப்பட்டு, ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் முன்மொழிவுத் திட்டங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் தொடர்புபடுத்தல் மற்றும் தேவையான சிபாரிசுகள் சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விளையாட்டு உதவி மற்றும் ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வளித்தலுக்காக 12 அமைப்புக்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்காக ரூபா 250,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 03 நிறுவனங்களுக்காக ரூபா 162,080 தொகை

உதவி வழங்கப்பட்டிருந்தது. அதன்படி அதன் நிதி செயலாற்றல் 64 சதவீதமாகவும் பௌதீக செயலாற்றல் 25 சதவீதமாகவும் இருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்றின் படி வீடமைப்பு உதவி அட்டுறு செலவினம் ரூபா 7,300,000 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்ட எனினும் கொடுப்பனவு செய்யப்படாத உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 74,280,756 ஆனமையால் வீடமைப்பு உதவி மற்றும் அட்டுறு செலவினங்கள் ரூபா 66,980,756 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் மூலதன செலவின விடயம் 124-2-5-2502 இன் கீழ் வழங்கப்பட்ட ரூபா 46,860,000 ஏற்பாட்டுத் தொகை பயன்படுத்தப்பட்டு முதலீடாக குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களுக்கு உதவியாக வழங்க வேண்டிய போதிலும் இத்தொகையில் ரூபா 1,039,537 சமூக சேவைகள் அமைச்சின் எரிபொருள் செலவினம் உட்பட ஏனைய செலவினங்களை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) அங்கவீனர்கள் தொடர்பாகவும் அவ்வாறானவர்களுக்கு வழங்கப்படக்கூடிய சேவைகள் தொடர்பாகவும் சரியான புள்ளிவிபரங்களைப் பேணிச் செல்லல்.

(ii) ஊனமுற்றதற்கான பிரதான காரணங்களைக் கண்டறிதலும் அவற்றைத் தடுத்தலும் மற்றும் கட்டுப்படுத்தலுக்கான ஆக்கபூர்வமான படிமுறைகளை மேம்படுத்துதல்

(iii) ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வு நிலையங்களை ஆரம்பித்து பேணிச்செல்லல்.

(iv) ஊனமுற்றோருக்கு தங்குமிட வசதிகளை வழங்கி அவர்களைக் கவனித்துக்கொள்வதற்கான நிறுவனங்களை உருவாக்கி பேணிச்செல்லலும் அவ்வாறானவர்களுக்கு கல்விசார் மற்றும் தொழில் தகைமைப் பயிற்சியினை வழங்குதலும்.

## 4.2 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்காக ரூபா 17,233,350 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றை வழங்கியதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட நபர்களின் பெயர்கள் மற்றும் கையொப்பம் பிழையாக இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ரூபா 1,502,800 பெறுமதியான கண்ணாடிகள் விடயப்பொறுப்பு அமைச்சரின் இணைப்புச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்றோருக்காக சக்கர நாற்காலிகளை வழங்க வேண்டிய போதிலும் ரூபா 1,618,500 பெறுமதியான 130 சக்கர நாற்காலிகள் வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

**4.3 பதவியணியினர்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 27 பேராக இருந்ததுடன் நிரந்தர பதவியணியினர் 09 ஆக இருந்தமையால் 19 பதவிகளில் வெற்றிடமாக காணப்பட்டன. அதன் காரணமாக சமூக சேவைகள் அமைச்சில் 06 உத்தியோகத்தர்களும் சேவை மூப்பு அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்களும் மற்றும் சமூக சேவை திணைக்களத்தில் 03 உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக 20 உத்தியோகத்தர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2012 ஒக்தோபர் 12 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட கட்டளைகள் அமுலாக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காணப்பிக்கப்படுகின்றன.

| பொது முயற்சிகள் குழு கட்டளை இலக்கம் | கட்டளைகள் |
|---|---|
| 05 | ஊனமுற்றோர்களின் செயலகத்தினால் சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஊனமுற்றோர்களின் உரிமைகள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் வரைவு ஐக்கிய நாடுகளின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டதா என அமைச்சருடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல். |
| 06 | நாட்டில் உயிர் வாழ்கின்ற ஊனமுற்றோர்களின் அண்மைக்கால தகவல்கள் தொடர்பான தரவு வங்கியொன்றைப் பேணிச் செல்வதற்குரிய வழிமுறைகள் தொடர்பான அறிக்கையொன்று 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்குதல் |
| 07 | நாடு முழுவதும் புனர்வாழ்வு நிலையங்களுக்கு உதவி வழங்குவதற்கு விருப்பமான சங்கங்கள் / நபர்களுடன் தொடர்பினைப் பேணிச் செல்வதற்கும் அவ்வாறான நிலையங்களின் நியமங்களை உயர்வடையச் செய்வதற்காக நிதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் பின்வரும் தகவல்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றினை ஒரு வாரத்திற்குள் சமர்ப்பித்தல் |

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படுகின்ற புனர்வாழ்வு நிலையங்களின் எண்ணிக்கை.

(ஆ) இந்த நிலையங்களை நடாத்திச் செல்வது யார் என்பது

(இ) ஒவ்வொரு நிலையத்திலும் இருக்கின்ற ஊனமுற்றோர்களின்

---

எண்ணிக்கை.

08 ஊனமுற்றோருக்கான பாடசாலைகளை கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்வதற்குள்ள இயலுமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

(அ) ஊனமுற்றோருக்கு விஷேட கல்வி வசதிகளை வழங்குவதற்காக நாடு முழுவதும் 25 பாடசாலைகள் இருக்கின்றமை.

(ஆ) இந்தப் பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வசதிகள் தொடர்பாக.

(இ) ஆசிரியர்களுக்கு எவ்வாறு பயிற்சிகளை வழங்குவது என்பது.

(ஈ) யாருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் இயலுமை காணப்படுகின்றது.

(உ) கல்வி அமைச்சின் கீழ் இந்தப் பாடசாலைகளைப் பதிவு செய்வதன் முக்கியத்துவம்

09 வீடமைப்பு உதவி, சுயதொழில் உதவி, வைத்திய மற்றும் கல்வி உதவிகளாக ரூபா 22 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தமை குழுவின் அவதானிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் இந்த செலவினங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக செயல்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச செயலகத்தின் மூலம் படிகளை வழங்குவதற்கு இது தொடர்பான செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் விலாசமிடப்பட்டு சுற்றறிக்கையொன்று வழங்குமாறு குழுவினால் சிபாரிசு வழங்கப்பட்டிருந்தது.

10 உறுதிச்சீட்டில் பெயர் குறிப்பிடப்படாத மற்றும் சட்டரீதியாக முகவராக இல்லாத நபரொருவருக்கு காசேட்டில் எவ்வித பதிவுகளும் இன்றி ரூபா 651,900 தொகை செலுத்தப்பட்டிருந்தாக குழு அவதானித்திருந்ததுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பதில் தொடர்பாக குழுவினால் ஏற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் அது தொடர்பாக விபரமான அறிக்கையொன்று குழுவிற்கும் கணக்காய்விற்கும் அனுப்புமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

11 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து அதிகளவான தொகை மூக்குக் கண்ணாடி வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 95,392 கண்ணாடிகளுக்காக ரூபா 13 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இவை நலனாளிகளுக்கு உரிய பிரகாரம் கிடைத்ததா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தமை குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இந்த மொத்த செயற்பாடுகள் தொடர்பாக செயல்முன்னேற்ற அறிக்கையொன்று குழுவிற்கும் கணக்காய்விற்கும் வழங்குமாறு வழங்கப்பட்ட கட்டளை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) வீடமைப்பு உதவிக் கொடுப்பனவு